செ.வெ.எண்: 795 நாள்: 7/12/07

# " பைலட் '' பயிற்சி பெறும் ஆதிதிராவிட மாணவருக்கு நிதி உதவி

மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரவர்கள் ஐந்தாவது முறையாக முதலமைச்சராக பதவியேற்ற நாளிலிருந்து ஆதிதிராவிட மாணவ, மாணவியரின் நலனுக்காக அரிய பல திட்டங்களை அறிவித்து வருகிறார். ஆதிதிராவிட பெண்களுக்கு விமான பணிப்பெண் பயிற்சி, ஆண்களுக்கு விமானப் பணியாளர் பயிற்சி (Cabin Crew) போன்ற முன்னோடி திட்டங்களை முதல்வரவர்கள் அறிவித்துள்ளார்கள். மாண்புமிகு முதல்வரவர்களின் சீரிய முயற்சியினால் தற்போது "கார்வர் ஏவியேஷன் பிரைவேட் லிமிடெட்'' என்ற நிறுவனம் மூலம் மும்பையில் உள்ள " பைலட் பயிற்சி'' பெற்று வரும் சேலத்தைச் சேர்ந்த ஆதிதிராவிட மாணவன் திரு C.அருண்குமாருக்கு 14.30 லட்சம் ரூபாய் உதவித்தொகையாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திருமதி ஆ.தமிழரசி அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் திரு அருண்குமாருக்கு ரூ.14.30 லட்சத்திற்கான காசோலையினை வழங்கினார். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலர் திரு வி.கனகராஜ்,இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் திரு தங்க கலியபெருமாள்,இ.ஆ.ப., மற்றும் பழங்குடியின இயக்குநர் திரு மாலிக் பெரோஸ்கான்,இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.